ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்யதர்மம்.

रागस्यागारमेकं नरकशतमहादुःख संप्राप्तिहेतुः
मोहस्योत्पत्तिभीजं जलधरपटलं ज्ञानताराधिपस्य।
कन्दर्पस्यैक मित्रं प्रकटनविविधस्पष्टदोष प्रवन्धम्
लोकेस्मिन्नहनर्थ व्रजकुलभवनं यौवनादन्यदन्ति ॥

ஆசைக்குமுக்கியமான இருப்பிடமாயும், பலநரகங்களிலேற்படும் அதிக துக்கத்திற்குக்காரணமாயும் அக்ஞானமென்கிற விருக்ஷத்தின் உற்பத்திக்குவித்தாயும் அறிவென்னும் சந்திரனை மறைப்பதற்கு மேகபங்திகள்போலும் மன்மதனுக்கு முக்கியமான சுகிருத்தாயும் பின்னும் நன்கு வெளியிடப்பட்ட அனேக தோஷங்களையுடையதுமான யௌவனத்தைக் காட்டிலும் இவ்வுலகில் பிராணிகளுக்கு துக்கத்தைக் கொடுக்கக்கூடிய வஸ்து வேறு யாது இருக்கின்றது.

மனிதர்களுக்கு யௌவனம் வந்தால் அது சகலவிதமான கஷ்டங்களுக்கும் முக்கியகாரணமென்பதை விளக்கிக் காட்டுகிறார். ஒரு பொருளையடைய வேண்டுமென்கிற அவாஏற்பட்டால் எவ்விதமான பாபங்களையும் பொருட்டாக நினையாமல் தைர்யத்தைக் கொடுப்பது ராகம். இதனாலேயே குரோதம், லோபம், முதலிய சத்ருக்களும் விருத்தியடைகிறார்கள். யௌவனமானது இவ்வித ஆசைக்கு வசமாக்கி அளவிறந்த பாபங்களைச் செய்யும்படி செய்து கொடிய நரகத்திற்குள்ளாக்குகிறது. மேலும் இந்த யௌவனமானது க்ஞானமென்னும் திங்களைமறைத்து மோகமெனப் பெயர் பூண்ட அக்ஞானத்தையும் விருத்திசெய்கிறது. சகல கெடுதல்களுக்கும் காரணமான மதனனுக்கு மித்திரனாகவும் ஆகிறது. இவைகளை எல்லாம் கவனித்தால் சகலஜனங்களாலும் நன்கறியக் கூடிய ஸ்பஷ்டமான பலதோஷங்களுக்கு யௌவனமே முக்கியமான காரணமென்றும் இது போல் மற்றொன்றுமில்லை என்றும் நன்றாய்த் தெரிந்த விஷயம்.

ஆர்யதர்மம்.

ருதிரோத்காரி-ஹூ ஆனி-மீ எஉ

புருஷர்களால் நடத்தவேண்டிய குடும்ப காரியத்திற்கு

ஸ்திரீகள் தகுதியல்ல.

कामक्रोध प्रमुख रिपुसंवासितात्मीय चित्ता
कार्पण्याख्य स्फुरदुरु शिलाच्छन्न दानादिमार्गा ।
अर्थाशाढ्या विषयनिरतात्यक्तधर्मा कुबुद्धिः
स्त्रीपुंवच्च प्रभवति यदा तद्धि गेहं विनष्टम् ॥

காமக்குரோதம் முதலிய சத்துருக்களுக்கு இருப்பிடமான தன் சித்தத்தை யுடையவளாயும், கார்ப்பண்யமென்று பெயர்வாய்ந்த பெரிய சிலைகளால் மூடப்பட்ட தானமென்னும் மார்க்கத்தையுடையவளும், பொருளில் அதிகமான அவாவுள்ளவளும், சிற்றின்பத்தில் விருப்பமுடன் செல்பவளும், தனக்குரிய கர்மானுஷ்டானங்களில் பற்றுதலற்றவளும், துற்புத்தி வாய்ந்தவளுமான மங்கையானவள் புருஷர்களைப்போல் குடும்பகாரியத்தை நடத்த முன் வருவார்களாகில் அக்குடும்பம் சீக்கிரத்தில் நசித்துவிடும்.

ஒரு குடும்பத்திலிருந்து அக்குடும்ப காரியங்களை கிரஹஸ்த தர்மப்படி சரியாய் சாஸ்திர விரோதமில்லாமல் நடைபெறச் செய்யவேண்டியது புருஷர்களின் கடமை. அதிலும் ஸந்நியாஸியாயிருப்பின் அவர் அநதிகாரியாவர். பிர்மசாரியும் அவ்விதமே. ஆனல் குடும்பத்திற்கு வேறு சரியான வார்சு இல்லாத பக்ஷத்தில் பிர்மசாரியாயிருந்தாலும் கொஞ்சம் குடும்பகாரிய

த்தைக் கவனித்தால் பாதகமில்லை. எவ்வித சங்கட சமயம் நேர்ந்தாலும், புமான்களான உற்றார் உடன்பிறந்தார் முதலானவர்களைக் கொண்டு அக்காரியத்தை நடைபெறச் செய்ய வேண்டுமேயன்றி பரபுருஷர் முகம் பார்த்துப்பேசுவதற் கருகமில்லா பதிவிரதா தர்மத்தை பூஷணமாகக் கொண்ட பெண்டீர்கள் இக்காரியத்தில் முன் வரத்தகாதவர்கள். மேலும் இயற்கையில் காமக்குரோத மென்னும் பேயால் பீடிக்கப்பட்டவளும், கார்ப்பண்யமென்கிற கவசத்தினுள் விளங்கும் மனதுடனும் செல்வத்தில் விசேஷமான விருப்பமுடையவளும், இவ்வுலக வாழ்க்கையையே சிறந்த புருஷார்த்தமாகக் கொண்டவளும், இவைகளால் சாஸ்திரீயமான தர்மத்தில் பற்றுதலற்றவளாயுமிருக்கும் ஸ்திரீயானவள் தர்மநெறி தவாமல் நடத்த வேண்டியதாயும் சிறந்த மேதாவிகளுக்கும் மதிமயக்கத்தைக் கொடுக்கக்கூடியதுமான பெரிய குடும்பகாரியத்தை தர்மவிரோதமின்றி சரியாய் அனுஷ்டிக்க எங்ஙனம் அருகமாவாள்? இந்தக்காரியத்திற்கு யோக்கியமில்லாத இவள் அறிவின்மையால் தன்னால் நடத்தக்கூடுமென்று நினைத்துக்கொண்டு அற்பகாலம் தர்மவிரோதமாய்த் தனக்குத் தோன்றியவாறு காரியங்களை நடத்தவே அக்குடும்பம் அபிவிருத்தியடையாமல் கெட்டுப்போகின்றது. ஆகையால் மனையாளானவள் குடும்பங்களில் தனக்குரிய காரியங்களை மாத்திரம் செய்வது உசிதம். இந்தக் கருத்தைக்கொண்டுதான் மனுவும்,

शय्यासनमलंकारं कामं क्रोधमनार्जवम् ।
द्रोहभावं कुचर्यांच स्त्रीभ्योमनुरकल्पयत् ॥

ஸ்திரீகளுக்கு சயனத்திலும் அலங்காரம் செய்துகொள்வதிலும் எப்பொழுதும் ஆஸனத்தில் வீற்றிருப்பதிலும் போகத்திலும் விருப்பமுண்டென்றும் கோபம் ருஜுவின்மை துரோஹத்தன்மை கெட்டநடத்தை இவைகளும் உண்டென்றும் கூறி,

पिता रक्षति कौमारे भर्ता रक्षति यौवने ।
पुत्रस्तु स्थाविरे भावे न स्त्रीस्वातन्त्र्यमर्हति ॥

ஸ்திரீகளை பால்யகாலத்தில் பிதாவும் யௌவன பருவத்தில் கணவனும் முதிர்ந்த வயதில் புத்திரனும் ரக்ஷிக்கவேண்டும். அவர்களுக்கு எந்த ஸமயத்திலும் ஸ்வதந்திரமாய் ஒருகாரியத்தை நடத்த அதிகாரமில்லையென்றும் சொல்லியிருக்கிறார். ஆகையால் புருஷர்களால் நடத்தக்கூடிய காரியங்களில் ஒருக்காலும் இவர்கள் பிரவேசிக்கக் கூடாதென்றும் அப்படிப் பிரவேசித்தால் கஷ்டமேற்படுமேயன்றி சிரேயஸ் உண்டாகாது என்பதும் திண்ணம்.

அறன்வலியுறுத்தல்.

सुखाब्धि मोक्षदायिनः सुराधिपत्यदा दपि ।
स्वधर्मसंग्रहादृते नृणां किमत्रतारकम् ॥

இவ்வுலகில் கர்மாதி காரியான ஒரு புருஷன் நூறு அசுவமேதயாகங்கள் செய்தானேயாகில், மகேந்திரனுடைய போகத்தை அடைகிறான். அதுவும் முடிவில் அழிவுள்ளதாயிருப்பதால் அதை வெறுத்து நித்யமும் நிரதிசயமுமான மோக்ஷத்தைப் பெற முயலவேண்டும் என்று ஒரு உத்தமாதிகாரிக்குத் தோன்றினால் அவன் கர்மபயனை விரும்பாது ஈசுவரார்ப்பணமாக, கர்மாக்களைச் செய்துவர யத்தனிக்கவேண்டும். அப்படி செய்தால் அவனது பாபங்கள் தொலைந்து, மனதைக்கவர்ந்த ராகத்வேஷங்கள் நசிக்கின்றன. அதனால் ஈசுவரஸ்வரூபத்தையறியவேண்டுமென்ற விவிதிஷையானது ஏற்படுகிறது. பிறகு அதன் வாயிலாக மோக்ஷமும் சித்திக்கிறது. ஆகையால்

அநித்யமாயோ நித்யமாயோ உள்ள சிற்றின்பம் பேரின்பம் இவைகளுக்குச் சாதனமான தர்மத்தை ஸங்கரிக்கவேண்டியது மானிடருக்கு அவசியமானது. ஸம்ஸாரத்திலிருந்து கரை யேற்றக் கூடிய வஸ்து அதைத் தவிற வேறொன்றுமில்லை

स्वधर्मसंग्रहात्परं सुखप्रदं नृणां नहि ।
प्रमादतद्विमोचनात्परं नदुःखदायकम् ॥

மனிதர்களுக்குத் தங்கள் வர்ணாசிரமங்களுக்குரியவாறு விதிக் கப்பட்ட தர்மங்களை அனுஷ்டிப்பதைக் காட்டிலும் சுகத்தை தரக் கூடிய பொருள் இல்லை அல்லவா? அப்படியே பிரமா தத்தால் அத்தர்மங்களை விட்டுவிடுவதைக் காட்டிலும் கஷ்டத் தை விளைவிக்கக் கூடிய பொருளுமொன்றுமில்லை.

निजाश्रमो चित प्रकारतः सदा त्रिकारणैः ।
चिनोतु धर्मसंततिं यथास्वशक्ति सादरम् ॥

ஸ்வதர்மத்தைத் தள்ளி விடுவதாலாகிய கேட்டைப் போக்கிக் கொள்வதற்காக கர்மாவை அவசியம் செய்தே தீரவேண்டும். கிருஹஸ்தன் பொருட் செலவினாலும், வானப்ரஸ்தன் சரீரத் தை சோஷணஞ் செய்வதாலும், துறவி தியானம் முதலானதா லும், எக்காலமும் மனம் வாக்கு காயம் இவைகளால் தன்சக்தி க்குத்தக்கவாறு தர்மங்களை சிரத்தையுடன் செய்யவேண்டும்.

मनःप्रवृत्तिपूर्वकं कृतं हि धर्मतामियात् ।
ततःपरंतु वाचिकं च कायिकंच डाम्भिकम् ॥

மனம் வாக்கு காயம் ஆகிய மூன்று காரணங்களால் தேடக் கூடி ய தர்மத்தில் மனம் முக்யமாகிறது. மனதை ஒருவாறு சமா தானப் படுத்தி எந்த கர்மா செய்யப் படுகிறதோ, அதுவே அலௌகிகமான சிரேயஸ்ஸிற்கும் சாதனமாகும். அதற்கு மனதின் சமாதானமில்லாமல் செய்யப் பட்ட வாசிகமாயும் காயிகமாயும் உள்ள கர்மாவானது பிறரை வஞ்சிப்பதற்கேயா கும். சிரேயஸ்ஸிற்குச் சாதனமாகாது.

अमर्षणं गुणस्पृहा प्रकोपनं च दुर्वचः ।
मनोमलं विनामुना कृतंतु धर्मतास्पदम् ॥

பிரதிபந்தகமான பொறாமை ராகத்வேஷங்கள் முதலிய மனதின் மலங்களைத் தள்ளினுல் தான் தர்மானுஷ்டமான விஷயத்தில் மனதிற்கு ப்ரவிருத்தி ஏற்படும் என்று இதனுல் அறிவிக்கப்படுகிறது. பிறரின் மேன்மையைச் சகியாததாகிற பொறாமை இந்திரியங்களாகிய விஷயங்களில் ஆசை. அது கிடைக்காததால் ஏற்பட்ட கோபம் அதனுல் ஏற்படுகிற துர்பாஷணம் இவை மனதின் மலமாயிருந்து கொண்டு காரியத்திற்குப் பிரதிபந்தகமாகிறது. அவ்வித மலமில்லாமல் செய்யப் பட்டதே சிரேயஸ்ஸிற்கு சாதனமாகும்.

पुरःपुरः करिष्यते सुकृत्य मित्यभावयन् ।
करोति यत्पुरात्रते परं सहायतामियात् ॥

ஸத்காரியங்களை, பால்யம் யௌவனம் இவை சென்றதும் விருத்தாப்பியத்தில் செய்வோ மென்று இராமல் மரணம் எப்போது நேருமோ என்று பயந்து முன்னதாகவே செய்யவேண்டும். அப்படிச் செய்யப்பட்ட ஸத்காரியங்கள் தான் பரலோகத்தில் உதவிபுரியும். அப்படிச் செய்யப் படாமற்போனுல் பிறகு பச்சாத்தாபம் ஏற்படும். அப்போது அதனுல் ஒரு பிரயோஜனமுமில்லை. ஜீவித்திருக்கும் போது செய்யப் பட்ட புண்ணியகர்மாவானது பரலோகத்தில் பலத்தைத் தருகிறது என்று ஆகமத்தாலேயே தான் அறியப் படுகிறது என்று எண்ணவேண்டாம். அவ்விஷயத்தில் பிரத்யக்ஷப் பிரமாணமும் இருக்கிறது என்று இந்த சுலோகத்தால் தெரிகிறது.

सहायता हि कर्मणां नचागमैकमूलिका ।
सुदण्डिकास्थितीपि तद्वहाश्च तत्प्रदर्शकाः ॥

அழகிய பல்லக்கில் ஏறிப் போகிறவரும் அதைச் சுமந்து செல்கிறவர்களும் கர்மபலத்தை அனுபவிக்க வேண்டிய விஷயத்தில்.

பிரத்யக்ஷமாய் அறிவித்துக் கொண்டு திருஷ்டாந்தமாய் விளங்குகிறார்கள். பல்லக்கில் ஏறிச்செல்வது புண்யபலமாயும் அதைச் சுமந்து செல்வது பாபத்தின் பலனாகவும் அனுபவத்தில் தெரிகிறபடியால் அதுவே ஆகமபிராமாண்யத்தையும் ஸ்தாபிக்கச் செய்கிறது.

अवश्यकार्यकर्मणा मनुष्ठिति र्निरन्तरम् ।
भविष्यतो हि जन्मनश्शिलाऽध्वनः पिधायिनी ॥

அவசியம் செய்தே தீரவேண்டும் என்றுவிதிக்கப் பட்ட அக்னிஹோத்திரம் முதலிய நித்யகர்மாக்களை இடைவிடாமல் அனுஷ்டித்துவாழ்ந்தால் அதானது புண்ணியபாபங்களுக்குப்பலமான சுகதுக்கங்களுடைய அனுபவமாகிற மார்க்கத்தை அடைக்குங் கல்லாம். தர்மத்தால் பாபத்தைபோக்கிக் கொள்ளுகிறானென்று மறை ஓதுவதால் பாபங்கள் நசிக்கவே பிரதிபந்தகம் தொலைந்து விவிதிஷை முதலானதால் ஞானமேற்பட்டு அந்தஞானத்தால் ஸஞ்சிதம் ஆகாமி என்ற கர்மாக்கள் நசிக்கின்றன. அதனால் ஜன்மாவிற்குக் காரணமான கர்மா நசித்து விடுகிறபடியால் ஜன்மாந்தரம் ஏற்படுகிறதில்லை. ஜீவன் முக்தனாகவே ஆகிறான்.

अहेयधर्मसंहिता परायणस्य नित्यशः ।
सुखं च कामजं तथा यशश्च वर्धते भृशम् ॥

விட்டுவிட முடியாத நித்ய நைமித்திகாதிகளான கர்மாக்களை இடைவிடாது செய்கிறவனுக்கு தன் மனைவியோடு கூடுமின்பமும் தார்மிகன் என்ற புகழும் விருத்தியாகிறது. மற்றவனுக்கோ பிறன் மனைவியோடு கூடுமின்பமானது பின்பு துன்பமாய் விளைதலால் அப்போது இன்பமாய்த்தோன்றுமாயினும் துன்பமேயாகும். அதார்மிகன் என்ற அபகீர்த்தியும் பெருகும்.

नरस्तु शास्त्रचोदितं सुधर्ममाचरेन्मुदा ।
कदापि न स्मरेत्तथा निषिध्यमानमागमैः ॥

கர்மாதிகாரியான புருஷன் பிறரை வஞ்சனை செய்வது முதலிய தாமஸம் முதலான தோஷமில்லாமல் சந்தோஷத்துடன் சாஸ்திரத்தால் விதிக்கப் பட்ட நல்வினையை ஆசரிக்கவேண்டும். அப்படியே வேதங்களால் நிஷேதிக்கப் பட்ட களஞ்சபக்ஷணம் முதலான தீவினையை ஆசரிக்கக் கூடாது. ஆகையால் இவ்விதம் நகஸ்வரூபிணி என்ற விருத்த முள்ள கீழ்க்கண்ட பத்து சுலோகங்களால் தர்மத்தின் மேன்மையானது கூறப் பட்டது. சரீரங்கள் அநித்தியங்களானதாலும் ஸொத்துக்கள் சாசுவதமில்லாததாலும் மிருத்யு நெருங்கிக் கொண்டு வருகிறதாலும் தர்மத்தையே செய்ய முன்வரவேண்டும்.

अर्थागृहे निवर्तन्ते श्मशाने मित्रबान्धवाः ।
सुकृतं दुष्कृतं चैव गच्छन्त मनु गच्छति ॥

என்றபடி ஒருவன் மரிக்கும் போது பொருள்கள் வீட்டிலேயே நின்று விடுகின்றன. மித்திரர்களும் பந்துக்களும் மயானத்திலேயே திரும்பிவிடுகிறார்கள். நல்வினை தீவினைகள் தான் உயிரை துறந்து செல்லும் ஜீவனைப் பின்தொடர்கிறது.

धर्मोनित्यः सुखदुःखेत्वनित्ये ।

என்ற பாரதத்திலுள்ள ஸாவித்ரீ வசனத்தால் நித்யமான தர்மத்தைக்கைவிடாமல் அனுஷ்டித்து ச்ரேயஸ்ஸை அடைய முயல வேண்டும் என்று ஏற்படுகிறது

स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिंलभते पराम् ॥

என்று பகவானும் கர்மசப்தத்தால் தர்மத்தையே கருதி அதையனுஷ்டிக்கிறவன் மோக்ஷத்தைப் பெருகிறான் என்று அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். धर्मे सर्वं प्रतिष्ठितम् ॥

என்ற வசனத்தை ஆராயுமிடத்து ஸர்வசப்தவாச்யமான ஜகத்தின் பிரதிஷ்டைக்கே தர்மம் காரணம் என்று வியக்தமாய்த் தெரிகிறது. ஆகையால் வேதமூலமான தர்மங்களை வழுவாது நடத்தியும் நடத்தும்படி செய்தும் முயர்ச்சிப்போமானால் ஜன்மாக்களை மறுபடியும் எடுக்காமல் மோக்ஷத்தையடையக்கூடியவர்களாவோம்.

K. V. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

பாதிவ்ரதய்ம்.

(௭௫-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்விதமாகக் குஞ்சலனென்ற கிளியானது தன்னுடைய குழந்தை உஜ்வலனுக்கு ஐயந்திறிபறவசனுமிருதங்களைப் பானம் செய்வித்தபின் இரண்டாவது குமாரனாகிய ஸமுஜ்வலனை நோக்கி அப்பா ஸமுஜ்வலா ? இன்றையதின முணவுகளைச் சேகரிக்கும்பொருட்டு எவ்விடம் சென்றிருந்தாய். அங்கு வியப்பிக்கக்கூடிய விருத்தாந்தமேதாவது நடந்ததா ? என்று வினவ ஸமுஜ்வலன் தன் தந்தையின் மலரடியிற் சென்னியைச் சாய்த்து வணக்கத்துடன் விள்ளுவதாவது,

ஓ ! அறிவே திருவுருவாக வந்த என் அருமைத் தந்தையே ! யான் இன்றையதினம் வையகத்தின் வடபாலுள்ளதும், அம்புவிக்கு அளவுகோல் போலுளதும், கையிலைநாயகனின் கடுந்தவத்திற்குரியதுமுள்ள இமையமாமலைக்கு ஆகாரத்தைச் சேகரிக்கும்பொருட்டு நாடியிருக்குங்கால் அங்கோரிடத்தில் வீணுகானம் செய்துகொண்டிருக்கும் கந்தர்வர்களாலும், தவம் புரியும் முனிவராலும் பொற்கொடிபோன்ற அப்ஸரசுகளாலும் நேர்த்தியாயும்; அனேகவிதமான ஆச்சர்யங்களுக்கு பொக்கிஷம் போன்றதாயும் ஜாதி, செண்பகம், மல்லீ, ரோஜா, முல்லை, இருவாட்சி, பாரிஜாதம், மந்தாரம், மகிழம்பூ முதலிய பரிமள புஷ்பங்களால் இடைவிடாது குமுகுமுவென வாஸனையுற்றதாயும் பக்குவமானபழவகைகளால்ரம்யமாயுமிருக்கும் ஓர் தாமரை தடாகமானது; பாருக்கோர் விளையாட்டு கண்ணாடிபோல் தோற்றுவதைக்கண்டு யான் அங்கு சென்றதும் திரள்திரளாக கூடியிருந்த ஹம்ஸக்கூட்டங்களிலிருந்து கருப்பு நிறமுடைய ஓர் ஹம்ஸமானது அம்மானஸ தடாகத்தில் ஸ்நானம் செய்யும் பொருட்டு வந்ததும் சற்றுநேரத்திற்குள் அக்கூட்டத்திலிருந்து மூன்று ஹம்ஸங்கள் முன் சென்ற கிருஷ்ண ஹம்ஸத்தை நோக்கிச் சென்றன. பின் சென்ற மூன்று ஹம்ஸங்கள் மூக்கிலும் கால்களிலும் மாத்ரம் கருமை நிறமுடையவையாயும் மற்ற

அங்கங்களில் மிக வெண்மைநிறத்துடன் ஜ்வலித்துக்கொண்டு இருந்தன. அதன்பின்னர் கோபமான முகக்குறிகளுடன் பயங்கரமான ரூபமுற்றவையாயும் சிம்மம் புலி இவைகளின் பற்களைப்போல் கூர்மையான பற்களால் நடுக்கத்தை யுண்டுபண்ணுகிறதுகளாயும் விரித்த கேசபாசங்களால் பார்ப்போர்களை பயமுறுத்துகிறதுகளாயும இருக்கும் சரீரவடிவங்களுடன் முன் சென்ற நான்கு ஹம்ஸங்களின் பார்யைகளும் அம்மானஸ தடாகத்தை நோக்கி வந்தன. ஆனால் அவற்றுள் முன் சென்ற கிருஷ்ண ஹம்ஸங்கள்மாத்திரம் தடாகத்தில் ஸ்நானம்செய்தன. அதன் பார்யைகள் அங்குமிங்கும் போவதும் வருவதுமாய் ப்ரமித்துக்கொண்டிருந்தன. அன்றியும் கார்வண்ணம் கொண்ட ஹம்ஸங்களை இடைவிடாது பரிஹாஸம் செய்துகொண்டிருந்தன. இவைகளை இலட்சியம் செய்யாத கார்வண்ணம்கொண்ட ஹம்ஸங்கள் ஒன்றுக்கொன்று விவாதம் செய்துகொண்டு வானத்திற்செல்லுவதையும் கண்ணுற்றேன். மீதியிருந்த பெண் ஹம்ஸங்கள் மிகப்பயமுற்று ஆகாயத்தில் வெகுநேரம் சஞ்சரித்துக் கடைசியில் விந்தியமாமலையினுச்சியில் வளர்ந்தோங்கும் விருக்ஷங்களின் நிழல்களில் சற்றுநேரமுட்கார்ந்து பிறகு கோரமான துக்கங்களால் தகிக்கப்பட்டு யமனுக்கு இரையாயின.

இவைகளை எல்லாம் கண்ணுற்ற ஓர் வேடன் வேட்டையாடி சிரமபரிஹாரம் செய்யும்பொருட்டு ஓர் பாறையில் சற்று நேரமுட்கார்ந்தனன். பிறகு அவ்வேடனின் மனைவி ஜலபாத்திரத்துடன் புசிக்க ஆகாரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு தன் நாதனைநோக்கி வந்ததும் தன் கணவன் முன்போலிராமல் உத்தமபுருஷருக்குரிய அடையாளங்களுடன் வர்ணிக்கமுடியாத சரீரலாவண்யமுற்றவனுயும், ஆகாயத்தில் பிரகாசிக்கும் கதிரவனைப்போல் ப்ரதாபமுடையவனுயு மிருப்பதைக் கண்டு முன்னிருந்த லட்சணங்கள் தற்சமயமில்லாததால்அன்னியபுருஷனென்று நினைத்துத் திரும்பலானுள். இதனை அறிந்தவேடனும் ஓ நற்குணமுடைய நங்காய்! பசியாலும் தாகத்தாலும் வருந்தும் நின் ஆருயிர் காதலனான என்னை உபேக்ஷிப்பதின்

கருத்து யாது என்று வினவ அவ்வேடஸ்திரீ தன் நாதனைச் சற்று நெருங்கி "தேவரீர் யாது காரணத்தால் தங்களுக்கு இவ்வித தேஜஸ் உண்டாயிற்று. என்னுடைய நாதர் கார்மேக வண்ணராயும் சிவந்தகண்களை உடையவராயும் கருமை நிறமுடைய உடுப்புக்களைத் தரித்துக்கொண்டும் எல்லா ஜீவராசிகளையும் பயமுறுத்துகிறவராயுமிருப்பார். ஆதலாற்றான் எனக்குச் சந்தேகமதிகரிக்கின்றது என்றாள். ஆகையால் அவ்வேடனும் தன்னுடைய குலகோத்ரங்களையும் கிரீடாகாலத்திலுள்ள சிற்சில அடையாளங்களையும் கூறினன். ஆகவே அளவிறந்த ஆச்சர்யமுற்ற வேடஸ்திரீ அவ்விதமாயின் தங்களுக்கு இவ்வித தேஜஸ் உண்டாவதற்குக் காரணம் யாதென்று வினவ அவ்வேடன்ஒ என்ஆருயிர்க்காதலி! யான் வேட்டையாடிக்களைப்புற்று வெய்யிலின் கொடுமையால் நர்மதா நதியின் வடபாலுள்ள ஸங்கமம் சென்று ஸ்நானம் செய்துவிட்டு இங்கு வந்தேன். அதுமுதற்கொண்டு என்னுடைய சரீரமானது இவ்விதம் பரிசுத்தமாயிருக்கின்றது என்று கூறினன். உடனே வேடனின்மனைவி, தாங்கள் எனக்கு அத்தீர்த்தத்தைக்காண்பித்தபின் தங்களுக்கு அருசுவை உண்டிகளைத் தருகிறேன். ஆகையால் அவச்யம் தெரிவிக்கவேண்டுமெனவே அதற்கிசைந்து மனைவியுடன் வேடனும் அத்தீர்த்தம் சென்று ஸ்நானம் செய்தான். ஆகவே அவ்விருவரும் திவ்யலாவண்யமுற்ற சரீரத்துடன் திவ்யமான ஆடைகளை அணிந்துகொண்டும், செஞ்சந்தனங்களால் பூசப்பட்ட தேகத்துடனும், தேவலோகத்திலுள்ள மந்தாரம் பாரிஜாதம் முதலிய புட்பங்களால் தொடுக்கப் பெற்ற மாலைகளைத் தரித்துக்கொண்டும் கந்தர்வர்களாலும் முனிவராலு முபசாரத்துடன் பூஜிக்கப்பட்டும் திருப்பாற்கடலில் ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்டிருக்கும் கார்மேக வண்ணனின் பரமபதத்தில் ஐக்கியமடைந்தனர்.

ஆதலால் தேவரீர் யாது காரணத்தால் அந்த கிருஷ்ண ஹம்ஸங்கள் மானஸ தடாகத்தில் ஸ்நானம் செய்து பரமபதத்

தை அடைந்தன? எக்காரணத்தால் பெண்ஹம்ஸங்கள் துக்கத்தால் தகிக்கப்பட்டு மாண்டுபோயின? அந்தத் தடாகத்தில் முதலில் வேடன் மனைவியின்றி ஸ்நானம் செய்தபொழுது ஏன் பரமபதத்தை அடையவில்லை. அதன் பின்னர் தன் மனைவியுடன் ஸ்நானம் செய்யுங்கால் தக்ஷணமே எக்காரணத்தால் மோட்சத்தை அடைந்தனன். இவைகளை எல்லாம் தாங்கள் தயவுகூர்ந்து திருவாய் மலரவேண்டுமெனக் குஞ்சலன் கூறுகிறான்.

கேண்மின் ஓ என் அருமைக்குஞ்சுகளே! முன் ஒருகாலத்தில் நாரதமஹாமுனிவர் ஏதோவோர் கார்யார்த்தமாக இந்திர ஸபைக்குச் சென்றிருக்குங்கால் இந்திரன் முனிவரை உபசரித்து தனக்குள்ள பிர்மஹத்யாதோஷத்தை நிவிருத்திசெய்யும் வலிமை உலகிலுள்ள தீர்த்தங்களுள் எந்த தீர்த்தத்திற்குண்டென வினவ நாரதர் ஓ தேவேந்திரா! யான் உலகிலுள்ள தீர்த்தங்களை அறிந்திருந்தும் அவைகளின் மஹிமையையும் விசேஷா விசேஷங்களையுமறியேன். ஆதலால் தாங்கள் எல்லா தீர்த்தங்களையும் வரவழைத்து அவைகளின் வாயிலாக அறிந்து கொள்ளலாமென்றனர். அதுகொண்டே இந்திரனின் ஆக்ஞையால் ஒவ்வொரு நதிகளும் தீர்த்தங்களும் கைகூப்பிச்சிறமேற் கொண்டு அழகிய ஆபரணங்களை அணிந்துகொண்டும் திவ்யமான சரீரலாவண்யத்துடனும், அழகிய ஆடைகளை அணிந்து கொண்டும் இந்திரஸபையை நோக்கி வந்தன. அவைகளுள் சில தீர்த்தங்கள் ஹம்ஸம் சந்திரன் நல்முத்து இவைகளைப் போல் வெண்மை நிறத்துடனும் பொற்கொடி மின்னற்கொடி இவைகளின் நிறம் கொண்ட சிலதீர்த்தங்களும் இன்னும் சில தீர்த்தங்கள் கார்மேக வண்ணமுடையவையாயுமிருந்தன. ஆயிரம்கண்களாலும் அவைகளைக்கண்ணுற்று ஆனந்தபாஷ்பம் சொறிந்த இந்திரன் அச்சமயம் தனக்கு ஆயிரம் நாவில்லாக்குறையால் வருந்தி அவைகளை நோக்கிக் கூறுவதாயினன்· பரிசுத்தமான ரூபத்துடன் பாபத்தை விலக்கும் பாரிலுள்ள பாக்ய நதிகளே உயர்ந்த பதவியை அடைப்பிவிக்கும் உத்தம தீர்த்தங்களே?

உங்களுள் யாவர், பசுக்கள் வேதியர், ஸ்திரீகள் இவர்களைக் கொல்லுதலால் உண்டான தோஷத்தையும், தன்யஜமானனுக்கு த்ரோகம் செய்வதாலும், கட்குடித்தலாலும், சுவர்ணங்களைத் திருடுவதாலும், தன் குரவரைக்குறை கூறுவதாலும், ப்ரூண ஹத்யையினலு முண்டான கொடிய பாபங்களையும், தன் அரச னுக்குத்ரோகம் செய்வதாலும் நேசர்களை வஞ்சிப்பதாலும் அனேகம் தேவதைக்களின் மூர்த்திகளை இடிப்பதாலும், பிரா மணர்களின் காலட்சேபத்தைக் கெடுப்பதாலும், கிராமம் வீடு இவைகளைத் தஹனம் செய்வதாலும் புணரக் கூடாத மங்கயரை புணருவதாலு முண்டான இம் மஹா பாபங்களை விலக்கும் வல் லமையுள்ளவர் எனவே எல்லா தீர்த்தங்களும் எங்கள் ஐயனே? நாங்கள் பிர்ம தேவனல் உபபாபங்களைச் சங்கரிக்கும் பொருட்டு ஸிருஷ்டிக்கப் பட்டோம். குறித்த தோஷங்களை நிவிருத்தி செய்ய எங்களாலியலாது. ஆனல் பிரயாகை, புஷ் கரம், ஸர்வதீர்த்தம் வாராணஸீ இன்னன்கு தீர்த்தங்களே குறித்த தோஷங்களைச் சங்கரிக்கும் வல்லமையுள்ளன என்று ரைத்து இந்திரனின் ஆக்ஞையினல் எல்லா தீர்த்தங்களும்தத்த மிருப்பிடம் சென்றன. அது முதல் இந்திரன் பிர்மஹத்தி, கௌதமரின் பார்யையான அகல்கையை ஸம்பந்தித்தல், கட் குடித்தல், இவைகளாலுண்டான கொடிய பாபங்களைத் தாங்க மாட்டாமல் தப்பித்துக் கொண்டு பிரயாகை, புட்கரம், ஸர்வ தீர்த்தம் வாராணஸீ, இன்னன்கு தீர்த்தங்களையும் அனேக வித மாக ஏற்றிப் போற்றி நிராலம்பனுய் இருந்து தவம் செய் தான். ஆதலால் எல்லாதேவதைகளும் முனிவரும் யக்ஷர்களும் கின்னரர்களும் இன்னும் பலரும் ஒன்று கூடி மந்திரங்களால் பரிசுத்தமான கும்பஜலங்களால் இந்திரனை மாலவக மென்னும் தேசத்திற்கு அழைத்துச் சென்று அபிஷேகம் செய்தார்கள். ஆகவே எல்லா பாபங்களும் நீங்கியதால் மிகுந்த மகிழ்ச்சி யுற்ற இந்திரன் தீர்த்தங்களை நோக்கி புனிதமாக்கும் புண்ணிய தீர்த்தங்களே? உங்களுக்கு நீங்கள் தீர்த்தராஜாக்களாக பவிக் கும்வண்ணம் வரம்தந்திருக்கிறேன் என்றுவார்த்தைக்கொடுத்த

பின்னர் மாலவ தேசத்தை நோக்கி மஹிமையுற்ற மாலவாக ? நீயும் என்பாபங்களை(போக்கியபடியால்)ச்சங்கரித்தாயாதலால் எப்பொழுதும் அன்னபானாதிகளாலும் தனதான்யங்களாலும், ஸதா ஆதரிக்கக்கடவாயெனக் கூறி வரத்தைக் கொடுத்து விட்டு அவைகளைத்தத்தமிருப்பிட மனுப்பித் தானும் தன் ஸபையை நோக்கிச் சென்றனன்.

இஃது இங்ஙனமிருக்க என்னருமை சேய்களே? பாஞ் சாலதேசத்தில் விதுரனென்னும் ஓர் க்ஷத்ரியனுண்டு. அவன் பணத்தில் பேராசையுற்றவனாதலால் முற்பிறப்பில் பணநிமித்த மாக ஓர் பிராமணனைக் கொன்றனன். அதனால் அவன் அபஸ் மார ரோகத்தால் பீடிக்கப் பட்டு திடீரென்று பற்களைக் கடுகடு வெனக் கடித்துக்கொண்டும் பதருகிறகைகளைக்கூப்பிக் கொண் டு பார்க்குங்கால், வெறுப்பை விளைவிக்கும். அவலக்ஷண ரூபத் தத்துடனும் முகம் கருத்துக் கீழேவிழுவது உண்டு. ஆகவே அவ்விதுரன் சிகை,யக்ஞோபவீதம் இவைகளற்றவனாயும் சூன்ய மான நெற்றியுடனும் இருந்து கொண்டு பிராமணனைக் கொன்ற வனாயும் கட்குடித்தவனாயும் இருக்கும் எனக்கு அன்னம் கொடு ப்பார் யாருமுண்டோ வென வீடுவீடாகச்சொல்லிப்போவது வழக்கம். இவ்விதமே ஒவ்வொரு தீர்த்தங்களிலும் சென்று முறையிட்டும் பயனற்றிருப்பதை அறிந்து தபித்துக்கொண்டு கடைசியாக ஓர் விருக்ஷத்தின் நிழலிற்சென்று சற்றுநேரம்தங் கினவுடன் சந்திரசர்மாவென்னும் ஓர் பிராமணன் அதே விரு க்ஷத்தை அடைந்து விதுரனின் வரலாற்றை அறிந்தபின் தன் னுடைய விருத்தாந்தத்தைச் சொல்லுவதாயினன். என்னைப் போல் பாபத்தால் கஷ்டப்படும் எனதன்பனே? யான் இருப் பது மகததேசம். குருவைக்கொன்றதின் பயனாக இத்துய ரத்தை அனுபவிக்கிறேன். அதனால் என்னைச்சேர்ந்தவர்க ளும் பந்துக்களும் ஊருக்குவெளியே என்னை துரத்திவிட்ட

னர் என்றிவ்விதமுரைத்துக் கொண்டிருக்கும் போதே வேத சர்மாவென்னுமோர் பிராமணன் மிகக்களைப்புடனும் அனேகம் பாபங்களைச்செய்ததால் முகக்களையற்றவனுயுமிருந்துகொண்டு குறித்த விருக்ஷத்தின் நிழலை அடைந்ததும், அவ்விருவரும் சுவாமி? தாங்கள் யார்என்றுவினவ வேதசர்மா கூறுவதாயினன்.

(இன்னும் வரும்)

கே. எம். சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

சிவமயம்.

அறிவிப்பு.

பரமேச்வரனிடம் பக்தி நிறைந்த அன்பர்காள்! தேவகோட்டையில் விளங்கும் சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்திலிருந்து மிக வருமையான பற்பல சைவக்கிரந்தங்கள் அச்சிட்டு வெளியிடப் பெற்றிருக்கின்றன வென்பது யாவருமறிந்த விஷயம். அவற்றுள் ஆன்மார்த்த பரார்த்த பூஜாவிதிகளை நன்றுயறிவிக்கக் கூடியதாயும் ஸ்ரீமதப்பயதீக்ஷிதரா லியற்றப் பெற்றதாயு மிருக்கும் சிவார்ச்சன சந்திரிகை என்னும் புத்தக மொன்று. இப்புத்தகம் ஷை சங்கத்தாரால் நாகரத்தில் அச்சிட்டு குறைந்த விலையில் ஒரு ரூபாய் என்று வைக்கப்பெற்றிருக்கின்றது. இன்னும் அஷ்டப்பிரகாணத்துள் தத்துவபிரகாசிகை, தத்துவஸங்கிரஹம், தத்துவத்ரயநிர்ணயம், ஆகிய மூன்றும் ஒரு புத்தகமாக வெளிப்படுத்தி விலைரூபா ஒன்று வைத்திருக்கின்றது. புத்தகம் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி வரவழைத்துக்கொள்ளலாம்

விலாசம்

காரியதர்சீ

சிவாகமசங்கம்

தேவகோட்டை.

நாஸ்திகனுக்கு ஓர் சந்நியாசி சொன்ன சமாதானம்.

(௩௧-வது பக்கத் தொடர்ச்சி.)

[பிரம்ம வித்யா]

நெருப்பை நெருப்பு எப்படி அழிக்குமென்றான். இவன் தேகம் மண்ணால் செய்யப்பட்டதென்று ஒப்புக்கொண்டிருக்கிறான். அப்படியானால் நான் எறிந்த மண்ணாங்கட்டி இவனை எப்படி நோகச் செய்யும்?

3-வது தன்னிடம் கடவுளிருப்பதால் தான் சொல்வது கடவுள் சொல்வதென்றும் அதற்காகக் கோபித்துக்கொள்வது பயனற்றதென்றும் சொன்னான். அப்படியானால் கடவுளன்றோ இப்பொழுது அடிபட்டார். இவன் வருத்தப்படுவானேன். பிராது கொண்டுவருவானேனென்றார். அதிகாரி சிரித்து சரி தான் என்று ஒப்புக்கொண்டு அந்த துஷ்டனை முதுகில் 20-அடி மணிப்பிரம்பாலடிக்க உத்திரவளித்தார். அதுமுதல் கடவுளில்லை யென்ற சந்தேகம் இவனைவிட்டு நீங்கியது ஆகையால் முற்பிறவியில் செய்த தீவினையால் ஞானம் குன்றி அக்ஞானம் மெலிட்டு அதினால் மறைக்கப்பட்ட புத்தி சக்தியையுடைய நாம் நம்புத்திக்கும் யுக்திக்கும் நன்கு புலப்படாத விஷயங்களை அவை இல்லைஎன்றோ அல்லது வேறு விதமாயிருக்கிறதென்றோ பிடிவாதமாய் சாதிக்க முன்வராமல் நம் புத்திக்கெட்டாத விஷயத்தில் பெரியோர்களின் அபிப்பிராயங்களையும் சாஸ்திரங்களின் உண்மையான உட்கருத்தையும் பொறுமையுடன் நன்குவிசாரித்தால் கிரமமாய் உண்மையையறிந்து இவ்வுலகிலோ பரலோகத்திலோ நாம் அடைய விரும்பிய சுகத்தையடையலாமேயன்றி சாஸ்திரார்த்தங்களுக்கு விரோதமாயிருந்தாலும் தம் புத்திக்குத் தோன்றியதே சரியென்று நினைப்பது உசிதமல்லவென்று விலக்கவேண்டும்.